# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## பளிங்கைப் போல தெளிவான அழகுள்ள பரலோகத்திற்கான நம்பிக்கை நம்மை சந்தோஷப்படுத்துகிறது!




























மான்மின் சரித்திரத்தில் தேவனால் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களும் அன்பும் நிரம்பி வழிந்து வருகின்றன. எண்ணற்ற ஜனங்கள் ஜீவனுள்ள தேவனைச் சந்தித்து, அபரிதமான ஜீவ வார்த்தைகளையும், ஆச்சரியமான வல்லமையின் கிரியைகளையும் அனுபவித்தனர். தற்போது அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்; மீண்டும் வருகிற கர்த்தருக்காக காத்திருக்கின்றனர்.

குறிப்பாக மே மாதத்தில், தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களை தம்முடைய ஊழியராக அழைத்த தேவ கிருபையை எங்களால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

கண்காணி ஜேராக் லீ ஒரு மூப்பராக மாறி ஏழைகளுக்கு உதவவும், ஊழிய வேலைகளுக்கு பக்கபலமாக இருக்கவும் ஜெபித்துக் கொண்டிருந்தார். 1978 மே மாதத்தில், தேவன் அவரை ஒரு போதகராக அழைத்தார். அந்த நேரம் முதற்கொண்டு அவர் தம்மை வசனத்தினால் தரித்துக் கொண்டார்; அவர் கணக்கிட முடியாத உபவாச நேரங்களை தேவனுடைய வல்லமையைப் பெறும்படிக்கு ஏறெடுத்தார். 1982ல், வேதாகமக் கல்லூரியில் அவர் மூத்த மாணவராக இருந்தபொழுது மான்மின் சபையை திறந்தார்.

அவர் பூமியின் கடைசிபரியந்தமும் சுவிசேஷத்தை அறிவித்து, ஆண்டவருக்காக சாட்சியாக இருக்கும்படியாக ஜெபித்தார். 1984 மே மாதத்தில், தேவன் அவருடைய பிறந்தநாளில் உபவாசமிருந்து ஜெபிக்கும்படி உந்துதல் அளித்தார். அவருடைய ஜெபங்களையும் உபவாசங்களையும் ஏற்றுக்கொண்டு தேவன் பரலோகத்தைப் பற்றி விளக்கமாக விவரிக்க ஆரம்பித்தார். இந்த வெளிப்பாடுகளின் அடிப்படையில் அவர் பரலோகம் பற்றி இரண்டு புத்தகங்களை எழுதினார். முதலாவது பாகம் 27 மொழிகளிலும், இரண்டாவது பாகம் 14 மொழிகளிலும் பிரசுரிக்கப் பட்டுள்ளது. இந்தப் புத்தகங்களானது அநேக ஆத்துமாக்களை இரட்சிப்பின் பாதைக்குள் நடத்துகிறது (படம் 7).

1986 மே மாதத்தில், அவர் ஒரு போதகராக நியமிக்கப்பட்டார். கொரிய தேசம் முழுவதும் பல்வேறு இடங்களில் பல எழுப்புதல் கூட்டங்களை தேசிய சுவிசேஷமயமாக்குதலை அடையும்படி நடத்தினார். அவர் புத்தகம் மற்றும் ஒளிபரப்பு ஊழியங்கள் வாயிலாக உலகத்திலுள்ள திரளான ஆத்துமாக்களை இரட்சிப்பிற்குள் நடத்தும்படி முயற்சிக்கின்றார்.

1993 மே மாதம் முதல், அவர் ஒவ்வொரு வருடமும் இருவார விசேஷித்த எழுப்புதல் கூட்டங்களை நடத்தினார். கொரியாவிற்கு உள்ளும் புறம்பிலுமிருந்து வந்த அநேக மக்கள் தேவனுடைய வல்லமையை அனுபவிக்க முடிந்தது. வேதாகமத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளபடி, மரித்தவர்கள் உயிரோடு எழுந்தார்கள்; குருடர்கள் பார்வையடைந்தனர்; செவிடர்கள் கேட்டனர்; ஊமையர்கள் பேசினர் மற்றும் முடவர்கள் குதித்தெழுந்து நடந்தனர். மலட்டுத் தன்மையினால் அவதிப்பட்டு வந்த டஜன் கணக்கான தம்பதியினர் கர்ப்பந்தரிக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர். புற்றுநோய், எய்ட்ஸ் போன்ற கொடிய வியாதியோடிருந்த திரளான ஜனங்களும் குணமானார்கள். அது ஆதி திருச்சபை அனுபவித்ததைப் போன்ற பெரிதான எழுப்புதலுக்குள் வழிநடத்தியது.

1998 மே மாதத்தில், தேவன் அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிறந்தநாள் அன்று சூரியனைச் சுற்றி வானவில்லைப் பார்க்கும் படிக்கு சபை விசுவாசிகளை ஆசீர்வதித்தார். அது முதற்கொண்டு மூன்று நான்கு வளையங்கள் உள்ள வட்ட வானவில்கள்; நேர்க்கோடு, சமச்சீரான, சமச்சீரற்ற வானவில்கள்; k வடிவம், மோதிர வடிவம், மற்றும் நீண்டு பரந்து வளைந்த வானவில்கள் என பல்வேறு வகைகளில் வானவில்கள் தோன்றியுள்ளன (படம் 1, 2 மற்றும் 3; 3ம் பக்கம் பார்க்க).

2004 மே மாதத்தில், கடைசி விசேஷித்த எழுப்புதல் கூட்டமானது “மெய்யான சத்தத்தை முழங்குதல்” என்ற கருப்பொருளின்கீழ் நடந்தது. உலகமெங்கிலும் உள்ள எல்லா மான்மின் விசுவாசிகளும் செயற்கைக்கோள் ஒளிபரப்பு வாயிலாக ஆராதனையை ஏறெடுத்தனர். அவர்கள் நான்கு சுவிசேஷப் புத்தகங்களில் எழுதப் பட்டுள்ள பல்வேறு வகைகளிலான அற்புதங்களையும், அடையாளங்களையும் அனுபவித்தனர் (படம் 8).

2011 மே மாதத்தில், ஆவிக்குரிய உலகத்தின்மீது வாஞ்சையாயிருந்த சபை அங்கத்தினர்கள் அரோரா ஒளிகளைப் புகைப்படம் எடுக்கும்படிக்கு தேவன் ஆசீர்வதித்தார். அதன்மூலம் அவர்களால் தேவனுடைய மெய்யான ஒளியை உணர முடிந்தது. அவை தூதர்கள், இருதயங்கள் மற்றும் மீன் போன்ற வடிவங்களில் இருந்தன; வண்ணங்களும் வேறுபட்டிருந்தன (படம் 4,5 மற்றும் 6). இதன்மூலம், அங்கத்தினர்கள் ஆவியின் இருதயத்தை அடையப் பெறுவதற்கான அதிக வாஞ்சையைப் பெற்றுக்கொண்டனர்; விசுவாசத்திலும் வேகமாக வளர்ந்தனர் (3ம் பக்கம் பார்க்க).

மே 2013ல், தேவன் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்திற்குப் பதில் தந்து, போதகர்கள் மற்றும் சபை பணியாளர்கள் உள்பட எட்டு பேர் சபை அங்கத்தினர்களுக்கு முன்பதாக பரலோகம் மற்றும் நரகத்திற்குச் சென்று வரும்படியான ஆசீர்வாதத்தைத் தந்தார். அவர்களுடைய சாட்சிகளை அங்கத்தினர்கள் கேட்ட பொழுது, பரலோகம் மற்றும் நரகம் இருக்கிறது என்பதற்கான நம்பிக்கையில் அதிக உறுதிப்பட்டனர் (3ம் பக்கம் பார்க்க). 2014 மே மாதம் முதல், தேவனுடைய வார்த்தையின்படி பாவத்திற்கு எதிராக மரணபரியந்தம் போராடி, பொல்லாங்காய் தோன்றின எல்லாவற்றையும் களைந்துப் போட்டு, ஆவிக்குரிய மற்றும் பூரண ஆவிக்குரிய இருதயத்தை அடைந்த அங்கத்தினர்களை அறிவர். லீ தம்முடைய ஜெபமலை வீட்டிற்கு அழைத்து, அவர்கள் புதிய எருசலேமிற்கான வாஞ்சையோடுகூட சந்தோஷமான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழும்படிக்கு அவர் ஆண்டவருடைய அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

2016 மே மாதத்தில், அவர் மான்மின் நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களை அவருடைய ஜெப வீட்டிற்கு அழைத்தார். அவர்கள் உலகத்தை மேற்கொண்டு, விசுவாச ஓட்டத்தை ஓடி, அதன்மூலம் இந்த பாவங்கள் நிறைந்த உலகத்தை மறுரூபமாக்க தகுதியான ஆவிக்குரிய யுத்தவீரர்களாய் மாறும்படிக்கு அவர்களுடைய இருதயங்களில் பரலோகத்திற்கான நம்பிக்கையை அவர் விதைத்தார் (படம் 9).

இதுபோன்ற சந்தோஷங்கள் நிறைந்த நிகழ்வுகளின் மூலமாக மான்மின் அங்கத்தினர்கள் தங்களுக்கு சிறந்ததை கொடுக்க விரும்புகிற தேவனுடைய அன்பை அவர்களுடைய இருதயங்களின் ஆழத்தில் செதுக்கிக்கொள்ள முடிகிறது. அவருடைய அன்பின் மூலமாக தேவனுடைய வார்த்தையினாலும் ஜெபத்தினாலும் (1 தீமோத்தேயு 4:5) பரிசுத்தமுள்ளவர்களாக மாறும்படிக்கு அவர்கள் எதிர்நோக்குகின்றனர்.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# நீ விசுவாசிக்கக்கூடுமானால்?

"இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்." (மாற்கு 9:23)

•••

மாற்கு 9:22ல் தன் குமாரனுடைய பிரச்சனைக்காக இயேசுவுக்கு முன்பாக தகப்பன் வந்தான். அவனுடைய குமாரன் சிறு வயது முதல் அசுத்த ஆவி பிடித்திருந்த காரணத்தால் அவனால் பார்க்கவும் கேட்கவும் முடியவில்லை. அவனுக்கு வலிப்பு ஏற்பட்டது. அவனுக்கு வலிப்பு ஏற்பட்டவுடனே அவன் தீயிலோ அல்லது தண்ணீரிலோ விழுந்து விடுவான். பலமுறை அவன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது. அவன் இயேசுவை சந்தித்த போது, எப்படியிருந்தாலும், அவனது பிரச்சனை உடனடியாக தீர்ந்தது.

வியாதியாயிருக்கலாம், தொழில் பிரச்சனையாக இருக்கலாம், குடும்ப பிரச்சனையாக இருக்கலாம் அல்லது மனிதர்களால் தீர்க்கப்பட முடியாத பிரச்சனை ஏதானாலும் இருக்கலாம், அது விசுவாசத்தினால் தீர்க்கப்பட முடியும். இப்போது தேவனிடத்திலிருந்து பதிலைப் பெறுவதற்கு வழிகளை நாம் பார்ப்போம்.

## 1. நாம் விசுவாச அறிக்கைகளை செய்ய வேண்டும்

மாற்கு 9:22 அசுத்த ஆவி பிடித்திருந்த மகனுடைய தகப்பன் எவ்விதமாக பதிலைப் பெற்றுக்கொண்டான் என்பதை நமக்குக் காண்பிக்கிறது. அவன் இயேசுவிடம், "நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள்மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றான்." அவனது வாக்கியத்தைக் கருதி, இயேசு "நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" எனக் கூறி அவனில் விசுவாசத்தை நாட்டினார்.

தகப்பன், "விசுவாசிக்கிறேன்" என்றான். ஆயினும் இந்த அறிக்கை அவனது உண்மையான விசுவாசத்திலிருந்து வரவில்லை. அவன் மிகவும் திடமாகப் பேசிய இயேசுவின் ஆவிக்குரிய அதிகாரத்தினால் ஆட்கொள்ளப்பட்டபடியால் அப்படியாயிற்று; இருள் விலகி ஓடியது. இந்த தகப்பனுடைய எதிர்மறையான சிந்தனைகள் இயேசுவின் வார்த்தையால் கீழ்ப்படுத்தப்பட்டன. இது நடக்க சாத்தியமாயிற்று, காரணம் இந்த தகப்பனுக்கு நல்ல இருதயம் இருந்தது. மேலும் அவனால் இயேசுவைக் குறித்த செய்திகளை விசுவாசிக்க முடிந்தது. அதாவது அவனுக்கு அறிவுச் சார்ந்த விசுவாசமானது இருந்தது.

உங்களுக்கு அறிவைச் சார்ந்த விசுவாசம் இருக்குமேயானால், நீங்கள் எப்போதும் சாதகமான விசுவாச அறிக்கைகளை எந்நேரமும் செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும். உங்கள் உதடுகளின் வார்த்தைகள் மிகவும் முக்கியம். ரோமர் 10:10, "...நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்" என்று சொல்கிறது. நாம் விசுவாசத்தினாலே இரட்சிப்பையும் பதில்களையும் பெற்றுக்கொள்கிறோம் என்பது உண்மை தான். ஆனாலும் கிரியைதான் விசுவாசத்தைப் பூரணப்படுத்துகிறது. அதனால் சாதகமான விசுவாச அறிக்கை தான் பூரண விசுவாசத்தை அடைவதற்கு அஸ்திபாரமாகும். மேலும் அது குறைந்தபட்ச செயலாகும்.

சில விசுவாசிகள் எதிர்மறையான அறிக்கைச் செய்வார்கள். அவர்கள் பதிலைப் பெற்றுக் கொள்வதற்காக ஜெபிக்கும்போதும்கூட இவ் விதமாக சொல்லிக் கொண்டு அல்லது நினைத்துக்கொண்டு இருப்பார்கள், "எனது குடும்ப அங்கத்தினர்களுக்கு மிகவும் கடினமான இருதயம் இருக்கிறது. அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்கிறார்கள்." "எனக்கு நல்ல இருதயமாகிய நிலம் இல்லை, அதனால்தான் என்னால் விசுவாசத்தின் கன்மலைமேல் நிற்க முடியவில்லை. ஆவியின் நிலையைப் பற்றி சொல்லவே வேண்டாம்." "என்னால் முடியாது! சாத்தியமல்ல! மிகவும் கடினம்! ரொம்ப கஷ்டம்! இது கூடுமா? உண்மையிலேயே என்னால் முடியுமா?"

மாற்கு 10:27 சொல்கிறது, "இயேசு அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான், தேவனால் இது கூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும் என்றார்." பிதாவாகிய தேவனும்கூட எரேமியா 32:27ல், "இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கார்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" என்று சொல்கிறார்.

நாம் வார்த்தையைப் பற்றிக்கொண்டு, "தேவனால் எல்லாவற்றையும் செய்ய முடியும். நாம் இந்த தேவனை விசுவாசிக்கிறோம், மேலும் நம்மாலும்கூட எல்லாம் செய்ய முடியும்" என்று சொல்ல வேண்டும். நாம் தேவன் சர்வ வல்லவர் என்பதை குறைந்தபட்சம் நம்முடைய அறிவினாலாவது அறிந்து வைத்திருந்தால், நாம் அதை நம்முடைய உதடுகளினாலே சொல்ல வேண்டும். அதனால் விசுவாசம் நம்முடைய இருதயத்தில் வளர ஆரம்பிக்கும்.

பிரச்சனை பெரியதோ அல்லது சிறியதோ எல்லாவற்றையும் தம்முடைய வார்த்தையாலே சிருஷ்டித்த தேவனுக்கு அது ஒன்றுமேயில்லை. உங்களுடைய எதிர்மறையான வார்த்தைகளாலே சர்வ வல்லமையுள்ள தேவனை நீங்கள் இயலாத தேவனாக மாற்றினால் பின் அது தேவனுக்கு ஏமாற்றத்தைத் தரும். இப்படி செய்வது நீங்கள் சாத்தானின் சதிவலைகளிலே சிக்கிக் கொள்ள செய்து விடும். ஆதலால் உங்கள் இருதயத்திலிருந்து விசுவாச அறிக்கை செய்ய முடியவில்லை என்றாலும்கூட, நீங்கள் விசுவாசத்தின் சாதகமான அறிக்கைகளை இன்னமும் செய்வீர்கள் என நான் நம்புகிறேன். விசுவாசத்தின் சாதகமான அறிக்கைகள் விதையாக மாறி இறுதியாக அவைகள் பூரண விசுவாசத்தின் கனியை விளைவிக்கும்.

## 2. இருதயத்திலிருந்து விசுவாசிப்பதற்கு நாம் விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்

வாசித்த வேத பகுதியில் உள்ள தகப்பன் "விசுவாசிக்கிறேன்" என்று சொன்ன பிற்பாடு அவன் "என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும்" என்றான். "விசுவாசிக்கிறேன்" என்று அவன் அப்போதுதான் சொன்னான். ஆயினும் அவன் உடனடியாக ஏன் "என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என்றான்?

இயேசுவின் அதிகாரமுள்ள வார்த்தைக்கு முன் வாஞ்சையுள்ள இருதயத்தோடு இந்த தகப்பன் விசுவாசிக்கிறேன் என்றான். ஆனால் இப்போது அவன் பதிலைப் பெற்றுக்கொள்ளத்தக்க ஆவிக்குரிய விசவாசம் அவனுக்கு இல்லை என்று அறிக்கைச் செய்தான். இயேசுவின் வல்லமை தனது குமாரனை சுகப்படுத்துவதற்கு அவன் இருதயத்திலிருந்து நம்புகிற அப்பேர்பட்ட விசுவாசத்தை காண்பிக்க வேண்டும் என்று அவன் அறிந்துணர்ந்திருந்தான். இருப்பினும் அவனுக்கு இருந்த விசுவாசம் மிகக் குறைவு என்பதை உணர்ந்தான்.

உங்களது மகனுடைய நோயை குணமாக்கக்கூடிய மருந்தை எங்கெங்கோ தேடி இறுதியாக அதைக் கண்டுபிடித்துவிட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் அந்த மருந்தை வாங்க செல்கிறீர்கள். அப்போது நீங்கள் ஆயத்தம் செய்த பணம் போதவில்லை. உங்களது மகனை குணமாக்கும்படி மருந்து உள்ளவனிடம் உங்களால் கெஞ்சி யாசகம் கேட்காமல் இருக்க முடியாது. இயேசு ஏற்கனவே இந்தத் தகப்பனுடைய இருதயத்தை அறிந்திருந்தார். தன் மகனுடைய பிரச்சனையை தீர்க்கும்படி அந்தத் தகப்பன் வந்தபோது அவனுடைய வாஞ்சையுள்ள இருதயத்தை இயேசு அறிந்தார். அவன் எவ்வளவு முயற்சித்தான் என்பதையும் இயேசு அறிந்தார். இயேசு அவனது குணாதிசயம், அவனது முயற்சி, ஊக்கம், உண்மை மற்றும் தாழ்மையையும் அறிந்திருந்தார். அதனால், இயேசுவின் இருதயம் இறுதியாக அசைந்தது. அவர் அந்த குமாரனிலிருந்து பேயை விரட்டினார்.

இங்கு இருதயத்திலிருந்து விசுவாசிப்பதற்கு விசுவாசத்தைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. வாசித்த பகுதியிலுள்ள தகப்பனைப் போல, தேவனை அடையக்கூடிய நம்முடைய முயற்சியை நாம் காண்பிக்க வேண்டும். முதலாவது நமக்கு எந்தப் பாவச் சுவரும் இருக்கக்கூடாது என்பது உண்மைத்தான். பாவச் சுவர் ஏதும் இல்லாமல், நாம் தேவனை அசைக்கக்கூடிய இப்பேற்பட்ட முயற்சியையும் தேவனைப் பிரியப் படுத்தும் கிரியைகளையும் நாம் காண்பித்தால், நாம் இருதயத்திலிருந்து விசுவாசிப்பதற்கு விசுவாசத்தைப் பெற்றுக்கொள்வோம்.

இருதயத்திலிருந்து விசுவாசிப்பதற்கு விசுவாசத்தை அதாவது ஆவிக்குரிய விசுவாசத்தை நாம் பெற வேண்டும் என விரும்புவதால் மட்டுமே பெற்றுவிட முடியாது. தேவன் மாத்திரமே அதை நமக்குத் தர வேண்டும். இருதயத்திலிருந்து விசுவாசிப்பதற்கு விசுவாசம் நமக்கிருந்தால் நாம் பதிலைப் பெற்றுக்கொள்வோம் என்ற நிச்சயம் நமக்கு இருக்கும். இறுதியாக அது நடக்கும் என்று நாம் விசுவாசித்தது போலவே நடக்கும்.

## 3. நாம் பதிலைப் பெற்றுக்கொள்ளும் வரைக்கும் ஜெபத்தில் சத்தமிட்டு கூப்பிட வேண்டும்

மாற்கு 9:24ல் எழுதப்பட்டுள்ளபடி, தகப்பன் இயேசுவிடம் கதறி கூப்பிட்டான். அவனது கூப்பிடுதல் அவன் இருதயத்தில் எவ்வளவு வாஞ்சை உள்ளவனாயிருந்தான் என்பதை நமக்குச் சொல்கிறது. எல்லாம் கூடச் செய்கிற விசுவாசத்தைப் பெறுவதற்கு நமக்கு இப்பேற்பட்ட செய்கை மிகவும் அவசியம்.

எரேமியா 33:3கூட, "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" என்று சொல்கிறது. எசேக்கியேல் 36:36 மற்றும் 37ன் பிற்பகுதி சொல்கிறது, "கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன், இதைச் செய்வேன், கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேல் வம்சத்தாருக்காக நான் இதை அநுக்கிரகஞ்செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்; மந்தை பெருகுகிறதுபோல் அவர்களில் மனிதரைப் பெருகப் பண்ணுவேன்" என்று சொல்கிறது.

வேதாகமத்தில் விசுவாசத்தின் முற்பிதாக்கள் தேவனுக்கு முன்பாக கதறி கூப்பிட்டார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். தேவனுடைய குமாரனாகிய இயேசுவும் கூட ஜெபத்தில் பலத்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அவர் கெத்சமனேயில் ஜெபித்தபோது, அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையில் விழும் அளவிற்கு அவர் முழு பெலத்தோடு ஜெபித்தார். அவர் சிலுவையில் தொங்கும்போதும், "உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று பலத்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்.

பதிலளிக்கப்படும் வரையில் நாமும் ஜெபத்தில் கதறிக் கூப்பிட வேண்டும். நீங்கள் விசுவாசத்தோடு துவங்கினால் முடிவு மட்டும் விட்டுவிடாமல் ஜெபிக்க வேண்டும். கூடாத காரியம் ஒன்றிற்காக நீங்கள் பதிலைப் பெற வேண்டுமானால், முயற்சி மற்றும் நீடிய பொறுமையின் மூலமாக நீதியின் அளவை நிரப்ப வேண்டும். ஜெபத்தில் நீங்கள் தொடர்ந்து கதறி கூப்பிட்டுக் கொண்டிருந்தால், பதிலைப் பெறுவதற்கு நீங்கள் பாத்திரத்தை ஆயத்தப்படுத்தியிருப்பீர்கள். ஜெபத்தில் நீங்கள் கதறி கூப்பிட்டால், பரிசுத்த ஆவியால் நீங்கள் நிரப்பப்படுவீர்கள். மேலும் அவரது சத்தத்தை கேட்பீர்கள் அல்லது நீங்கள் சிலவற்றிலிருந்து மனம்திரும்ப வேண்டும். அல்லது குறிப்பிட்ட செயலை காண்பிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்கிற அவரது வழிநடத்துதலைப் பெறுவீர்கள்.

ஜெபத்தில் தொடர்ந்து கதறி கூப்பிடுகிற தேவனுடைய பிள்ளைக்கு பரிசுத்த ஆவியானவர் பதிலைப் பெற்றுக்கொள்வதற்கான வழியை போதிப்பார். தேவன் இருதயத்திலிருந்து விசுவாசிப்பதற்கு விசுவாசத்தைத் தருவார். மாறாக பரிசுத்த ஆவியின் உந்துதலுக்கு நீங்கள் கீழ்ப் படியாமற்போனால், நீங்கள் ஜெபத்தில் எவ்வளவு கதறி கூப்பிட்டாலும்கூட பதிலைப் பெறுவதற்கான பாத்திரம் ஆயத்தப்படுத்தப்பட்டு இருக்காது. ஆக இருதயத்திலிருந்து விசுவாசிப்பதற்கேதுவான விசுவாசத்தை உங்களால் பெற முடியாது. ஜெபத்தில் சத்தமிட்டு கூப்பிடுவதால் நீங்கள் ஆசீர்வாதங்களையும் பதில்களையும் பெறவும் உங்கள் பாத்திரங்களை நன்கு ஆயத்தப்படுத்தவும் உங்களை ஊக்குவிக்கிறேன்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, வாசித்த பகுதியில் உள்ள இந்த தகப்பனைப் போல இருதயத்திலிருந்து விசுவாசிப்பதற்கு விசுவாசத்தைப் பெறும்வரையில் நாம் நம்முடைய விசுவாசத்தை அறிக்கை செய்து சத்தமிட்டுக் கூப்பிட்டால் நாம் எப்பேர்பட்ட பதில்களையும் பெற்றுக் கொள்ளலாம். கூடாதது ஏதுமில்லா சிருஷ்டி தேவனை விசுவாசிப்பதால் நீங்கள் விரும்புகிற எவற்றிற்கானாலும் பதிலைப் பெற்று தேவனை மகிமைப்படுத்தும்படி ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**

**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**

**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**

**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**

**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17:25]

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]

# தேவன் அருளிய வெகுமதிகள் நம்முடைய இருதயங்களை பரலோகத்திற்கான நம்பிக்கையால் நிரப்புகின்றன

இந்த முடிவு காலம் பாவங்களாலும் பொல்லாப்பினாலும் நிரம்பியிருக்கின்றது. அதனால் தேவன் விசுவாசிகளை பலவகையான ஆவிக்குரிய அனுபவங்களை பெறச் செய்திருக்கிறார். அதன்மூலமாக அவர்கள் பரலோக அழகை உணர்ந்து பூமியிலே சந்தோஷப்பட்டு அதனோடு விசுவாசத்தால் உலகத்தை மேற்கொள்ள முடிகிறது.

## "என்ன ஒரு ஆச்சரியமான வானவில்!"

"வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக் கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்தது; அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று" (வெளி 4:3).

சகோதரி சேரிம் கிம், வயது 29
மூவான் மான்மின் திருச்சபை

மே 15, 1998ல் மான்மின் மத்திய திருச்சபைக்கு மேல் சூரியனைச் சுற்றி ஒரு வட்ட வானவில் வானத்தில் தோன்றியது! அப்போதிலிருந்து திருச்சபையின் நிகழ்வுகள் மற்றும் பணித்தள பயணத்தின்போதும் எண்ணற்ற முறைகள் வானவில்கள் தொடர்ந்து தோன்றியுள்ளன.



ஜனவரி 19, 2011ல் தேவனுடைய கிருபையால் நான் ஒரு ஆச்சரியமான வானவில் புகைப்படத்தை எடுத்தேன். அது சூரியனைச் சுற்றி இருந்த வட்ட வானவில். அதன் இரு பக்கங்களிலும் ஒரே சீரான அமைப்புடன் இரண்டு வானவில்கள் அது பார்ப்பதற்கு நடுவில் வைரங்களுடன் கழுகின் சிறகுகள் போல காணப்பட்டது. அந்த வானவில்லுக்கு மேலாக அரைவட்ட வானவில்லும் ஒரு வில் வடிவ வானவில்லும் இருந்தன. அது பல வடிவங்களுள்ள ஒன்றுக்கும் மேற்பட்ட வானவில் (படம்).

அந்த நாள் காலையிலே என் அப்பா மூவான் மான்மின் திருச்சபை போதகர் மியாங்சூல் கிம் வீட்டுக்குள் ஆச்சரியத்துடன் ஓடி வந்து தீவிரமாக, "வானத்தில் ஏதோ அதிசயம் நடக்கிறதென்று" சொன்னார். நான் வானத்தைப் பார்க்கும்படியாக வெளியே ஓடினேன்; நான் ஆச்சரியத்தில் மூழ்கிவிட்டேன். அப்பேற்பட்ட வானவில் ஒன்றைப் பார்ப்பது அதுவே எனக்கு முதல் முறையாகும். மூவான் மதுர தண்ணீர் தோட்டத்திற்கு எனது புகைப்படக் கருவியுடன் ஓடினேன். அதை எனது மீன்–கண் லென்ஸினாலும் கூட பிடிக்க முடியாத அளவு அந்த வானவில் மிகவும் பெரியதாக இருந்தது. நான் புல் தரையில் படுத்து அதன் புகைப் படத்தை எடுத்தேன். முதலாவது அது வட்டமான இரு பக்கங்களிலும் ஒரே சீர் அமைப்பான வானவில்லாக காணப்பட்டது. நேரம் செல்லச் செல்ல, அதன் வடிவம் மாறிக் கொண்டே இருந்தது. என்னோடு இருந்த சபை அங்கத்தினர்கள் நன்றியுடனும் ஆச்சரியத்துடனும் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். நான் ஆச்சரியத்தில் திளைத்தேன், காரணம் அது தேவனுடைய மாமகிமையையும் மாட்சிமையையும் வெளியே காண்பித்ததுபோல காணப்பட்டது.



ஜீவனுள்ள தேவனுடைய நிருபணங்களின் புகைப்படங்களை நான் எப்போதெல்லாம் எடுக்கிறேனோ, அப்போதெல்லாம் தேவனுடைய அன்பு என்னை கவர்ந்துக் கொள்கிறது. மேலும், ஆவிக்குரிய மண்டலம் இருக்கிறதை நான் உணர்ந்தப் பிற்பாடு, நான் பரலோகத்திற்கான நம்பிக்கையைப் பெற்றேன். எனது ஆவிக்குரிய விசுவாசமும் அதிகரித்தது.

மர்மமான ஆவிக்குரிய உலகத்தை என்னை அறிந்துக்கொள்ள செய்து மேய்ப்பருடைய வல்லமை மூலமாக அப்பேர்பட்ட நிருபணங்களை காணச் செய்த தேவனுக்கு எல்லா நன்றிகளையும் மகிமையையும் ஏறெடுக்கிறேன்.

## "அலங்காரமான அரோரா ஒளிகள் ஸ்தோத்திரம் மற்றும் சந்தோஷத்தின் ஆதாரம்"

"மழைபெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்தப் பிரகாசம் காணப்பட்டது; இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது; அதை நான் கண்டபோது முகங்குப்புற விழுந்தேன்; அப்பொழுது பேசுகிற ஒருவருடைய சத்தத்தைக் கேட்டேன்" (எசேக்கியேல் 1:28).

மூத்த கண்காணியை ஒக்ஜூ கிம், வயது 55.
மாகாணம் 11 மான்மின் மத்திய திருச்சபை



எனது கணவர் வேறொரு தேசத்தில் பணிபுரிந்தார். அதனால் நாங்கள் பிரிந்து வாழ வேண்டியிருந்தது. மிக நல்லவனாகவும் கரிசனையுள்ளவனாகவும் இருந்த என் மகனோடு வாழ்ந்து வந்ததால் அதை என்னால் தாங்கிக் கொள்ள முடிந்தது. ஆனால் அவன் இராணுவத்திற்குச் சென்ற பிற்பாடு, நான் தனிமையாயிருந்ததால் சோகத்தை உணர்ந்தேன். அவர்களையும் நான் அதிகமாக தவறவிட்டேன். நான் அதிகமாக கண்ணீர் சிந்தினேன். ஜெபிப்பதற்கு பெலனை இழந்துப்போனேன். நான் ஜெபிக்க முயற்சிக்கையில், அதை ஓரளவு என்னால் சமாளிக்க முடிந்தது. இருப்பினும் வெறுமையை உணர்ந்தேன்.

மே20, 2011ல் தேவன் ஆவிக்குரிய மண்டலத்திலிருந்து வீசிய அவரது மெய்யான ஒளியை மான்மின் அங்கத்தினர்கள் உணர்வதற்கு அனுமதித்தார். அதுதான் அரோரா வெளிச்சம். மேலும் அரோரா வெளிச்சத்தின் பல வடிவங்களை நாம் புகைப்படம் எடுக்க முடிந்தது. அதில் மீன் போன்ற, பழம் போன்ற மற்றும் மலர் போன்ற பல வடிவில் அரோரா வெளிச்சங்கள் இருந்தன. அது பரலோகத்தை நமக்கு நினைப்பூட்டியது.

நானும்கூட தூதர்கள், ஆப்பிள் போன்ற அரோரா ஒளிகளை தேவனுடைய கிருபையில் படம் எடுத்தேன். ஒரு நாள் இரவு நான் சிலுவையை படமெடுத்தேன். அது இயேசுவின் சாயலின் அரோரா வெளிச்சத்தை வீசியது (படம்).

அப்போதிலிருந்து நான் தேவனுடைய அன்பையும் கிருபையையும் அதிகமாக உணர ஆரம்பித்தேன். அதன் பிற்பாடு நான் வெறுமையை உணரவில்லை. நான் நன்றியையும் சந்தோஷத்தையும் உணர்ந்தேன். விசுவாசமும் நம்பிக்கையும் என்னில் அதிகரித்தது. மர்மமான அழகான அப்பேர்பட்ட அரோரா ஒளியால் என் இதயத்தை தேற்றி பரலோகத்திற்கான நம்பிக்கையால் என் இதயத்தை நிறைத்த ஆண்டவருக்கு நன்றிகளை செலுத்துகிறேன். ஹலேலூயா!



## "ஆவி பிரிதலின்மூலமாக பரலோகம் நரகம் இருக்கிறதென்பதை நிச்சயித்துக் கொண்டேன்"

"கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்" (2 கொரிந்தியர் 12:2).

கண்காணி ஹயாங்சாங் கிம், வயது 57,
மாகாணம் 9, மான்மின் மத்திய திருச்சபை

மே 25, 2013ல் வெள்ளி முழு இரவு ஆராதனையின் இரண்டாம் பகுதியிலே, எனக்கு ஒரு ஆச்சரியமான அனுபவம் ஏற்பட்டது. பரிசுத்தமாக்கப்பட்டவர்களாக மாறிய திருச்சபை பணியாளர்கள் மற்றும் போதகர்கள் எட்டுபேர் மேடையில் இருந்தனர். அவர்களது ஆவி அறிவர். ஜேராக் லீ அவர்களது ஜெபத்தின்மூலமாக பிரிந்து பரலோக வாசஸ்தலங்கள், மேலான பாதாளம், கீழான பாதாளம் மற்றும் நரகம் ஆகியவற்றிற்குச் சென்றன. பிரிதலுக்குப் பிற்பாடு அவர்கள் தாங்கள் கண்டவற்றை சாட்சியாகப் பகர்ந்தனர் (படம்).



வேதாகமத்தில் பவுலின் ஆவி அவர் சரீரத்திலிருந்து பிரிந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது எழுதப்பட்டுள்ளது. அதே போலவே போதகர்களும் பணியாளர்களும் பரலோகம் மற்றும் நரகத்தில் தாங்கள் கண்டவற்றை குறித்துப் பேசினார்கள். அது பரலோகம் நரகம் இருக்கிறதென்பதை அறிவுறுத்தி என்னை மனம் மாறச் செய்தது. இதைக் காட்டிலும் மிக ஆச்சரியம் என்னவென்றால் நான் கவனித்துக் கொண்டிருக்கையில் என் கண்கள் முன்பாக, மிகப் பெரிய மாட்சிமையான பரலோக மலர் படுக்கை பரம்பி இருந்தது. நான் இந்த மலர் படுக்கையை மட்டுமே பார்த்திருந்தாலும்கூட, நான் மிகவும் சமாதானத்தையும் உள்ளங்கொள்ளைப் போனதையும் உணர்ந்தேன். அதன்பின் தேவன் அக்கினி கடலில் கடலுக்கு வெளியே தங்கள் தலைகள் மற்றும் கழுத்துகள் மட்டுமே காணப்படக்கூடிய நிலையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த மக்களை நான் பார்க்க அனுமதித்தார். அவர்கள் மிகவும் பரிதாபகரமாகவும், தப்பிக்க மிகவும் ஆவலோடும் இருந்தனர்.

நான் இவற்றை அனுபவித்த பிற்பாடு, அறிவர். லீ அவர்களது புத்தகங்களான பரலோகம் I & II மற்றும் நரகம் ஆகிய புத்தகங்களைப் படித்து விளக்கங்களை அறிந்துகொண்டேன். நாம் செய்ததிற்கு ஏற்றபடி பிரதிபலன் அளிக்கும் ஆண்டவருடைய அன்பை நான் கற்றறிந்து பரலோகத்திற்கான அதிகமான நம்பிக்கையை பெறலானேன். அந்நாட்களில் எனது கிறிஸ்தவ வாழ்வை அப்போதுதான் துவங்கியிருந்த எனக்கு அது என்னுடைய விசுவாசத்திற்கான மிகப் பெரிய ஆதாரமானது.



இப்போது நான் 3–4 ஆண்கள் பணித்தளத்தில் தலைவர்களில் ஒருவனாகவும் செல்குழு தலைவராகவும் உள்ளேன்; புதிய எருசலேமிற்கான நம்பிக்கையோடு பணிபுரிந்து வருகிறேன். மனிதர்களுடைய கடமையை எனக்குக் கற்பித்து, மெய்யான நம்பிக்கையை தந்த தேவனுக்கு எல்லா நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

# ஜீவனுள்ள வார்த்தை எனக்கு உண்மையான சந்தோஷத்தை தந்தது

கண்காணி ஹியுன்சாங் ஷின், வயது 77, பூசான் மான்மின் சபை



எங்களை வழிநடத்தும்படிக்கு ஒரு உண்மையான போதகரை நானும் என் மனைவியும் மூன்று ஆண்டுகளாக பார்த்துக் கொண்டிருந்தோம். இதற்கிடையில் நாங்கள் மான்மின் மத்திய சபையைக் குறித்து கற்றுக்கொண்டோம். நான் அறிவர். ஜேராக் லீ அவர்களின் சிலுவையின் செய்தி என்ற புத்தகத்தை வாசித்தேன். இந்த உலகம் புரிந்துகொள்ளாத செய்தி அதுவென்று அறிந்துகொண்டேன். இந்தப் புத்தகமானது வேதாகமத்தின் முக்கிய கருத்துக்களை வெளிப்படுத்தியது; அது என்னை முற்றிலும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

இந்தப் புத்தகம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி விவரிக்கிறது. அது தான் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தின் முக்கிய கருத்தாகும். ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் இந்தப் புத்தகத்தை வாசிக்க வேண்டும் என நான் நினைக்கிறேன். குறிப்பாக, அது போதகர்களும் வேதாகமக் கல்லூரி மாணவர்களும் கட்டாயம் வாசிக்க வேண்டிய ஒன்றாகும். நான் இந்த விலைமதிப்புள்ள புத்தகத்தை என்னைச் சுற்றியுள்ள போதகர்களுக்கும், எனக்குப் பழக்கமானவர்களுக்கும் கொடுத்தேன்.

மேலும் நான் விசுவாசத்தின் அளவு என்ற புத்தகத்தையும் வாசித்தேன். அது விசுவாசத்தின் ஒவ்வொரு அளவையும் தொகுத்து வழங்குகிறது. அதன்மூலம் வாசகர்கள் தங்களுடைய விசுவாசம் எந்த அளவில் இருக்கிறது என்பதையும், அதை எவ்வாறு அதிகமாக்க முடியும் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த விரிவான விளக்கங்கள் என்னை அதிசயிக்க வைத்தது. தலைமை போதகருடைய செய்திகள் எவ்வாறு ஆண்டவரை நாம் பிரதிபலிக்க முடியும் மற்றும் ஆவிக்குரிய பூரண ஆவிக்குரிய இருதயத்தை அடைய முடியும் என்பவைகளின் ஒருங்கிணைப்பாக இருக்கிறது. நான் தலைமை போதகரை சந்திக்கும் வரைக்கும் இதுபோன்றதொரு செய்திகளை வேறெங்கும் கேட்டதில்லை.

குறிப்பாக, நான் 'சிருஷ்டிப்பும் அறிவியலும்' என்ற GCN தொலைக்காட்சி (www.gcntv.org) நிகழ்ச்சியை ரசிக்கிறேன். இந்த நிகழ்ச்சியானது மனிதனின் சரீரம், உயிரினங்களின் சரீரங்கள், பிரமீடுகள் மற்றும் வேறு அநேக காரியங்களின் மர்மங்களை தலைமை போதகருடைய ஆதியாகமம் பிரசங்கத்தின் அடிப்படையில் தெள்ளத் தெளிவான விளக்கங்களோடு வழங்குகிறது. பரிசுத்த ஆவியின் உந்துதலால் வியாக்கியானம் செய்யப்படுகிற ஜீவனுள்ள வார்த்தைகளினால் என்னால் அதிசயிக்காமல் இருக்க முடியவில்லை.

அவருடைய தாழ்மையும் தியாகமும் ஆண்டவரை எனக்கு நினைப்பூட்டுகிறது. அவர் இயேசுவின் வழிகாட்டும் கருவியைப் போன்றவர் என்று நினைக்கிறேன்.

என் தொழிலில் நான் வெற்றியடைந்து, அநேக காரியங்களை அனுபவித்திருக்கிறேன். இருந்தாலும் என் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் சரியாக பணிவிடைச் செய்யாததைக் குறித்து நான் வருத்தமடைகிறேன். நான் தலைமை போதகருடைய போதனை மற்றும் வாழ்க்கையினால் அதிகமாய் அசைக்கப்பட்டேன். அவருடைய போதனைகள் எனக்கும் என் குடும்பத்திற்காகவும் கொடுக்கப்பட்டவையாகும். இப்பொழுது நாங்கள் உண்மையான மகிழ்ச்சியை ஒவ்வொருவருடனும் பகிர்ந்து கொள்கிறோம்.

இந்த நாட்களில் என்னுடைய முழு விசுவாச ஜீவியத்தில் இதுவரை அனுபவித்திராத சந்தோஷமான தருணத்தை அனுபவிக்கிறேன். ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும் தேவனிடத்திலிருந்து விலையேறப்பெற்ற பிரசங்கங்களைப் பெறும்படிக்கு தன்னையே அர்ப்பணித்த தலைமை போதகருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த கடைசி நாட்களில் நம்மை வழிநடத்தும்படி இப்பேற்பட்ட விலையேறப்பெற்ற மேய்ப்பரை அனுப்பின தேவனுக்கும் நான் நன்றி செலுத்துகிறேன்.

# 9வருட காத்திருப்புக்குப் பின் ஒரு அழகிய மகளைப் பெற்றெடுத்தேன்

சகோதரி சத்யா, வயது 32, மதுரை மான்மின் சபை, இந்தியா



நான் ஒரு இந்து குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள். 2006 டிசம்பரில் என்னுடைய திருமணத்திற்குப் பிறகு எனக்கு குழந்தைப் பிறக்கவில்லை. காரணத்தைக் கண்டறிய ஒரு மருத்துவரை சந்தித்தபொழுது, பல பைகளுள்ள சூலகங்கள் குறைபாடு எனக்குள் கண்டறியப்பட்டது. அதற்காக நான் கருப்பை நீர்க்கட்டி அறுவை சிகிச்சையை செய்திருந்ததால், அதன் விளைவாக என்னால் இனி குழந்தையைப் பெற்றெடுக்க முடியாது.

2014 அக்டோபரில், என்னுடைய சகோதரி என்னை மதுரை மான்மின் சபைக்கு (போதகர் பெர்சியாள் ராஜதுரை) வழிநடத்தினாள். கொரியா, சீயோலில் உள்ள மான்மின் மத்திய சபையின் ஆராதனையில் GCN ஒளிபரப்பு வாயிலாக நான் பங்குப்பெற்றேன். நான் தொடர்ச்சியாக பங்குப்பெற துவங்கியபொழுது, தேவனுடைய வல்லமையால் ஜனங்கள் தங்களது வியாதிகளிலிருந்து குணமானதையும், கருத்தரிக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டதையும், தங்களது ஜெபங்களுக்குப் பதில்களைப் பெற்றுக்கொண்டதையும் பற்றிய திரளான சாட்சிகளைக் கேட்டேன். ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ளும்படிக்கு தேவனிடத்தில் விசுவாசத்தோடு நானும் ஜெபிக்கத் தொடங்கினேன்.

சபையின் 19வது ஆண்டுவிழா ஆராதனை ஏறெடுக்கப்பட்டபொழுது கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டமும் நடைபெற்றது. சென்னை மான்மின் சபையின் போதகர் ஜோசப் ஹான் அவர்கள் அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபித்துக்கொடுத்த கைக்குட்டையை (அப். 19:11–12) வைத்து எனக்காக ஜெபித்தார். மேலும், நான் தேவனுடைய வல்லமை அடங்கிய மூவான் மதுர தண்ணீரை (யாத்திராகமம் 15:25) பருகி, அனைத்துப் பொருட்களிலும் அதைத் தெளித்தேன். நான் இதைச் செய்துக் கொண்டே இருந்தேன். 2015 ஜூலை மாதத்தில் நான் கர்ப்பந்தரித்திருப்பதை கண்டறிந்தேன்! அல்லேலுயா!

என்னுடைய மருத்துவர் ஆச்சரியத்தோடு கூட இது ஒரு அற்புதமே என்று சொன்னார். 2016, பிப்ரவரி 22ல் ஒன்பது வருட திருமணத்திற்குப் பிறகு நான் ஒரு ஆரோக்கியமான மகளைப் பெற்றெடுத்தேன். இந்த அழகான மகளைத் தந்த தேவனுக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் நான் செலுத்துகிறேன்.

# நான் பெருவிரல் விலகல் மற்றும் இரத்தக் கொதிப்பிலுமிருந்து சுகமடைந்தேன்

கண்காணி ஹியுன்வோ லீ, வயது 55, 11வது மாகாணம், மான்மின் மத்திய சபை



இரண்டு வருடங்களுக்கு முன்பு எனக்கு இரத்தக் கொதிப்பு உண்டானது 210 mmHg (இயல்புநிலை 120/80 mmHg). ஆனால் நான் இந்த இரத்தக் கொதிப்பிலிருந்து கைக்குட்டை (அப். 19:11–12) ஜெபத்தின்மூலமாக குணமானேன். சமீபத்தில் நான் மீண்டும் ஆச்சரியமான தேவனுடைய வல்லமையை அனுபவித்தேன். அதனால் என் கிறிஸ்தவ வாழ்க்கை புதிதானது.

2015 ஜூலை மாதத்தில், என்னுடைய வலது காலின் பெருவிரல் அருகிலுள்ள விரலை நோக்கி மடங்கிக் கொண்டது. பிறகு அது முற்றிலும் அந்த விரல்மேல் சாய்ந்துகொண்டது. அதுதான் கால் பெருவிரல் விலகல். அதிக குளிரில் மிகுந்த வலியை நான் உணர்ந்தேன். என்னால் வழக்கமான காலணியை அணியமுடியாததால், அதற்கேற்ப காலணியை அணிந்துகொண்டேன். அதன்பின்பு சிறிது நொண்டவும் ஆரம்பித்தேன்.

நான் தேவனால் சுகமடைய விரும்பினேன். எனவே என் முழு கிறிஸ்தவ வாழ்க்கையையும் நான் ஆராய்ந்துப் பார்த்து, நான் மறுத்த காரியங்களைக் குறித்து மனந்திரும்பினேன்; விசுவாசத்தின் நல்லதொரு அடித்தளத்தை அமைக்க முயற்சித்தேன். அதனால் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கவும், அனைத்து ஆராதனைகளில் பங்குப் பெறவும், ஊக்கமாக ஜெபிக்கவும் முயற்சித்தேன்.

பிப்ரவரி 21ல், ஞாயிறு காலை ஆராதனையில் காணொளியில் அறிவர். ஜேராக் லீ அவர்களின் வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தை என் இருதயத்திலிருந்து பெற்றுக் கொண்டேன். அதன்பிறகு, சபையில் இங்கும் அங்கும் சென்றேன்; என் குழுவின் கூட்டத்திற்காகச் சென்றேன். அதன்பிறகு நடப்பதில் எனக்கு எவ்வித கஷ்டமும் இல்லை என்பதை நான் அறிந்துகொண்டேன்; நீண்ட அடியைக்கூட எடுத்து வைத்தேன்.

என் ஜெபத்திற்குப் பதிலளித்து, என்னுடைய வியாதியிலிருந்து என்னை குணமாக்கி, ஆவிக்குரிய விசுவாசத்தையும் எனக்குத் தந்த ஜீவனுள்ள தேவனுக்கு நான் சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com